DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 98/2023

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | வெங்கடேசன் |
| Father / Husband Name | வரதன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 12.03.2025

**குறுக்கு விசாரணை:**

1. நான் 8ம் வகுப்பு வரை படித்து தற்போது கொத்தனாரிடம் மேஸ்திரியாக உள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் ஆங்கிலத்தில் உள்ளது என்றால் அதன் விவரங்களை வழக்கறிஞர் கூறிய பிறகு கையொப்பம் செய்தேன். நேரடியாக படிக்க தெரியாது. எதிரியிடம் எப்போது சீட்டு போட்டேன் என்று எத்தனை நபர்கள் எவ்வளவு தொகை போட்டார்கள் என்ற விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எப்போது சீட்டு போட்டேன் என்றால் வழக்கு காசோலையை கொடுப்பதற்கு 4 வருடத்திற்கு முன்பு சீட்டு போட்டேன். நான் எவ்வளவு தொகைக்கு எத்தனை முறை சீட்டு கட்டினேன் என்ற விவரத்தை பிரமாணவாக்குமூலத்தில் புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை.

2. 4 வருடங்களுக்கு முன்பு எப்போது முதல் மாதம் சீட்டை கட்டினேன் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. மேற்படி விவரங்களை பிரமாணவாக்குமூலத்தில் புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை. எதிரியின் முகவரி படப்பை, சக்தி நகர் ஆகும். அந்த முகவரிக்கு தான் நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு அனுப்பப்பட்டு, அந்த முகவரியில் அவர் இல்லை என்று திருப்பப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எந்த முகவரிக்கு காசோலை சம்மந்தமான வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் மேற்சொன்ன முகவரிக்கு தான் அனுப்பினேன். எதிரி வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றுக்கொண்டதாக ஒப்புதல் அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது.

3. ம.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள கையொப்பம் எதிரியுடையது இல்லை என்றாலும் அதில் உள்ள சங்கதிகளுக்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும் ம.சா.ஆ.5 பதில் கடிதத்தில் உள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடுகள் உள்ளது என்றால் சரியல்ல ஒன்றாக தான் உள்ளது.

மாறுபட்டு உள்ள கையொப்பத்தை சரியாக உள்ளதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு எந்த ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றாலும் ம.சா.ஆ.5 ஆவணம் வழக்கிற்காக நானாக தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் சிட்டி யூனியன் வங்கி, படப்பை கிளை 06.03.2023 ம் தேதியிட்டு காசோலையை என்னிடம் 06.03.2023 ம் தேதி அன்று எதிரியின் வீட்டில் வைத்து காலை 7.30 மணிக்கு கொடுத்தார். அதை நான் அன்றே வங்கியில் தாக்கல் செய்துவிட்டேன். நான் சொல்லும் விவரங்கள் பொய் என்றாலும் நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எதிரி என்னிடம் காசோலையை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

4. என்னுடன் சீட்டு போட்டதாக சொல்லப்பட்ட மற்ற நபர்களை வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் உண்மையில் மற்றவர்களுடன் சேர்ந்து சீட்டு போட்டிருந்தால் அவர்களையும் சாட்சிகளாக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. பொதுவாக சீட்டு கட்டிய பிறகு ரசீது கொடுக்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறு நான் ரசீது எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி எனக்கு ரூபாய் 42,000/- தொகைதான் கொடுக்கவேண்டும் என்றாலும் அதை நீதிமன்றத்தில் வைத்து கொடுத்துவிட்டார் என்றாலும், எதிரி எனக்கு வேறு எந்த தொகையும் தரவேண்டியது இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலையானது சட்டப்படியான கடன் மற்றும் கடன்பாட்டிற்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 4 வருடத்திற்கு முன்பு கொடுத்த கடன் என்று சொல்லப்படுவதால் அது காலாவதியான கடன் என்றால் சரியல்ல. எனக்கு சேரவேண்டிய தொகை சேர்ந்துவிட்டதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.